அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 05/2022

எனது இலக்கம் : EST-7/UNIFO/06/V
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.09.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## அரச உத்தியோகத்தர்களின் உடை

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2019.06.26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 13/2019(I) இன் பால் தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. மேற்படிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் I இன் கீழ், "அரசாங்க உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தினுள் தமது அலுவலக வளாகத்திற்கு வரும் போது ஆண் உத்தியோகத்தர்கள் காற்சட்டையும் மேற்சட்டையும அல்லது தேசிய உடை அணிந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பெண் உத்தியோகத்தர்கள் சாரி அல்லது ஒசரி அல்லது அரச சேவையின் கௌரவத்தைப் பாதுகாக்கும் பொருத்தமான, கண்ணியமான உடையொன்றை அணிந்திருத்தல் வேண்டும்." என்றவாறு அமைச்சரவை அங்கீகாரத்தின் ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தியுள்ளது.

03. அவ்வாறு சுற்றறிக்கை ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தியிருக்கும், பெண் உத்தியோகத்தர்களுக்கு தமது அலுவலக வளாகத்திற்கு வரும் போது உடையாக சாரி அல்லது ஒசரி மட்டும் அணியுமாறு ஒரு சில நிறுவனத் தலைவர்களினால் பணிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது.

04. அரச உத்தியோகத்தர்கள் தமது அலுவலக வளாகத்திற்கு வருகை தரும் போது மற்றும் கடமையில் ஈடுபடும் போதும் சேவையின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் பொருத்தமான அலுவலக உடையொன்றை அணிந்திருக்க வாய்ப்பளிக்கப்படல் வேண்டும். மேலும், இது கள உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையதாகும்.

05. அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் பாராளுமன்றம், நீதிமன்றம், தேசிய அல்லது சர்வதேச விழாக்கள் அல்லது மாநாடுகள் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் தேசிய உடை அல்லது குறித்துரைக்கப்பட்டுள்ள உடையினை அணிந்து பங்கேற்றல் வேண்டும்.

06. 2019.06.26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 13/2019 (I) இன் ஏற்பாடுகள் மாற்றமின்றி தொடர்ந்திருக்கும்.

ஒப்பம்./ எம்.எம்.பி.கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 011-2695738
தொலைநகல் இலக்கம் : 011-2695279
மின்னஞ்சல் முகவரி : pubad.secretary@sltnet.lk